

**ஆபிராகம் பண்டிதர்**

தமிழிசையியக்கத்தின் தந்தை இவரே, திண்டுக்கல் கடையாண்டி பட்டரிடம் இசையும், தஞ்சையில் நாதசுரமும், பிடிலும் கற்றவர். ஓலைச்சுவடுகளைச் சேகரித்து இசை ஆய்வினை நடத்தினார். பழந்தமிழிசைக்கும் கர்நாடக இசைக்கும் உள்ள தொடர்பினை ஆராய்ந்தார். ஏழுமறை இசை மாநாடுகளை நடத்தினார். இசைக் கலைஞர்களுக்கு உதவினார். இசை நூற்களை வெளியிட தஞ்சையில் அச்சகம் நிறுவினார். இசை நூற்களை எழுதி இசைப்பணியினை வளரச் செய்தார். இசை மேதைகளின் வரலாற்றினையும், கீதம், வர்ணம் முதலியவற்றைத் தமிழாக்கம் செய்தார். நான்கு இசைமுறைகளைக் கொண்டு விளக்கினார். 15 ஆண்டுகள் ஆய்வு செய்து வெளியிட்ட 1365 பக்கங்கள் கொண்ட ‘‘கருணாமிர்த சாகரத்திரட்டில் 96 பாடல்கள்’’ பாடியுள்ளார்.

**தேவனேயப்பாவணர்**

இவர் மன்னார்குடி இராசகோபாலாரிடம் முறையாக இசைபயின்றார். ‘‘இசைத்தமிழ்க் கலம்பகம்’’ நூலை எழுதினார். இதில் பல இராகங்களுடன் 305 பாடல்களை இயற்றியுள்ளார். இந்நூலில், பல்லவி, அனுபல்லவி, தாளம், பாணி முதலிய சொற்களை விளக்கியுள்ளார். இவரின் பாடல்களை ‘‘கிறிஸ்தவக் கீர்த்தனம்’’ எனும் நூலாக முனைவர் முதுப்பெரும் பேராசரியர் வி. ஞானசிகாமணி வெளியிட்டுள்ளார். தெம்மாங்கு சிந்து மெட்டுகளில் 51 பாடல்கள் எழுதியுள்ளார்.

மீண்டும் உங்கள் அறக்கட்டளையின் எதிர்காலப் பணிகளுக்கு ஜெபிக்கும்.

**அருள்திரு. லாசரஸ் செல்வநாதன்**
ஆயர்(ஓய்வு),
சென்னை வேலூர் திருமண்டலம்
94420 78744